நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாறு**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.139 / 2022**

வழக்கு சாட்சி- **அ.சா.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | தர்மராஜ் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சங்கிலி | : | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | வடுகன் புதுப்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 57/2023 |

( 1வது எதிரி ஆஜர், 2 முதல் 6 வரை ஆஜர் இல்லை. எதிரிகள்தரப்பில் 317 குவிமுச பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

**நாள் : 20.12.2023**

**முதல் விசாரணை:**

நான் வடுகன் புதுப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கு சம்பவத்தைபற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 04/12/2018 ஆம் தேதி அன்று காலை 06.30 மணி அளவில் நானும், ராமமூர்த்தி என்பவரும் சம்பவ இடத்தில் நின்று பேசி கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது பூதலூர் காவல்நிலையத்தை சேர்ந்தவர்கள் எங்கள் முன்பாக சம்பவ இடத்தை பற்றிய ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார்கள் அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து, எதிரிக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை : இல்லை

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)